## ராஜாங்கனை பிரதேச சபை

## அநுராதபுர மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 21 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 16 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூலை 30 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

----------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ராஜாங்கனை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------------

(அ) நிதிக் கூற்றுக்களில் கையிருப்பு என காணப்பட்ட 03 கணக்கு விடயங்கள் தொடர்பான கூட்டுத்தொகை ரூபா 705,981 ஆன இருப்பு பௌதீக ரீதியாக சபையில் காணப்படவில்லை. இதற்காக கணக்குகளில் ஏற்பாடுகள் மேற்கொள்வதற்காக அல்லது கணக்குக் குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) பொருளாதார நிலையத்தினை நிர்மாணிப்பதற்காக உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பெற்றிருந்த கடன் தொகையில் 2014 திசெம்பர் 31 திகதி அளவில் செலுத்த வேண்டிய ரூபா 385,052 இற்கான கடன் மீதியை நிதிக் கூற்றுக்களுக்கு எடுத்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களுக்கு எடுக்கப்பட்டுள்ள பொறித் தொகுதிகளின் பெறுமதி பட்டோலையில் காட்டப்பட்டுள்ள பெறுமதியை விட ரூபா 177,800 தொகை மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

--------------------------------------------------------------

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த 06 கணக்கு விடயங்களில் மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகளிடையே ரூபா 94,859,737 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

----------------------------------------------------------------

கூட்டுத்தொகை ரூபா 13,280,648 இற்கான 02 சொத்து விடயங்கள் தொடர்பாக உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்/ நிலையான சொத்துக்கள் பதிவேடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

2. நிதி மீளாய்வு

---------------------

2.1 நிதி விளைவுகள்

---------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது செயற்பாட்டு பற்றாக்குறை ரூபா 1,150,044 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செயற்பாட்டு பற்றாக்குறை ரூபா 1,295,455 ஆகும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

------------------------------------------------

(அ) பன்முகப்படுத்தப்பட்ட ஏற்பாடுகளின் மூலம் அப் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட குறைந்த வருமானம் பெறுவோரின் பிள்ளைகளுக்கு விநியோகிப்பதற்காக புத்தகங்கள் வாங்குவதற்காக சபை மந்திரிமார்கள் இருவரினால் ரூபா 99,785 தொகை செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் அப் பாடசாலை புத்தகங்களை விநியோகிக்கப்பட்ட முறை பற்றி மற்றும் பலன்பெறுவோர் தெரிவு செய்தல் தொடர்பாக சான்றுகள் ஏதும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) 02 கணக்கு விடயங்கள் தொடர்பாக பெற வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 1,904,931 தொகையும் மற்றும் 04 கணக்கு விடயங்கள் தொடர்பாக செலுத்த வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 1,279,016 இற்கான மீதிகளையும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 1994 ஆகஸ்ட் 14 திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் இலக்கம் NCP/LG/9/7/19(i) சுற்று நிருபத்தின் பிரகாரம் 05 வருடங்களுக்கு ஒரு முறையேனும் தலைமை பெறுமதி மதிப்பீட்டாளரினால் கடை வாடகை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டும். எனினும்

20 வருடங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட பெறுமதி மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு கடை வாடகை அறவிடப்பட்டிருந்தது.

(ஈ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 571(2) இன் பிரகாரம் ரூபா 1,406,781 தொகையான 2 வருடங்களை மிகைத்த உரிமை கோரப்படாத வைப்புக்களை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) 2002 நவம்பர் 28 திகதி IAI/2002/02 கொண்ட திறைச் சேரி சுற்று நிருபத்தின் பிரகாரம் கணனி துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

3.2 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

------------------------------------------------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 93(அ)(ஆ) மற்றும் (இ) பிரிவுகளுக்கு முரணாக சபையின் அதிகாரப் பிரதேசத்தில் மலசல வடிகால் மற்றும் குப்பைகள் அகற்றல் தொடர்பாக சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அத்துடன் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் மூன்று வாராந்த சந்தைகளின் குப்பைகள் மாத்திரம் சேகரித்து அகற்றப்படுகின்றன என வெளிப்படுத்தப்பட்டது.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு